'மஹாலக்ஷ்மி பெண்கள் நாடகக் குழுவின்' சார்பில் பல மேடை நாடகங்களில் நடித்த அனுபவம் உண்டு. நடிப்பது மட்டுமல்லாமல், சில டாக்குமெண்ட்ரிகளையும் இயக்கி உள்ளார். இந்தியாவை விட்டு வெளியேறிய பிறகு பாங்காக்கில் தென்னிந்தியச் சங்கத்திற்காக மேடை நாடகங்களை இயக்கியும், நடித்தும் உள்ளார்.

அமெரிக்கா வந்த பிறகு தமிழ் மன்றத்திற்காக இரண்டு நாடகங்கள், மற்றும் Mostly Tamilன் நூறாவது நாள் நிகழ்ச்சியில், "ஒரு நாள் குடிமகன்" Indo American Group நடத்திய தீபாவளி நிகழ்ச்சியில் குழந்தைகளை வைத்து "Parent Trap" என்ற நாடகங்களை இயக்கியுள்ளார். Mostly Tamil வானொலியில் நிகழ்ச்சிகளை தொகுத்தளிப்பதில் பெரும் ஆர்வம் உள்ளவர். சென்ற வருடம் சான் பிரான்சிஸ்கோ வளைகுடாப் பகுதித் தமிழ் மன்றத்தின் துணைத்தலைவி (கலைநிகழ்ச்சிகள்) ஆக பணியாற்றியுள்ளார்.

தமிழ் நாடக மேடையிலேயே முதல் முறையாக ஒரே கதாபாத்திரத்தில் இருவர் நடிக்கிறார்கள். இது ஒரு புதுமையான, வித்தியாசமான முயற்சி என்று இயக்குனர் தீபா ராமானுஜம் கூறினார். இந்த நாடகத்தைப் பற்றி அவர் கூறுகையில் - இந்தக் கதையில் வரும் கதாபாத்திரங்களைக் கண்டிப்பாக நாம் எங்கேயாவது சந்தித்திருப் போம். நம்மில் பலரது வாழ்வில் நடந்திருக்கும் அல்லது நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் நிறைந்ததாய் இருக்கிறது "தனிமை". கதை இந்தியாவில் நடப்பதாக இருந்தாலும், இங்கு மட்டுமல்ல, உலகெங்கிலும் உள்ள தமிழர்களின் உணர்ச்சிகளைத் தூண்டுவதாய் அமைந்துள்ளது என்று கூறினார்.



கலா மந்திர் நாடகக் குழுவின் நிறுவனரும், 1978ல் ஆரம்பித்து 18 நாடகங்களுக்கு மேல் எழுதியவரும், தொலைக் காட்சியில் பல தொடர்களை இயக்கியவரும், தற்பொழுது சன் TV யில் வெளிவந்து கொண்டிருக்கும் "உதயம்" மற்றும் "ஜனனி" தொடர்களுக்குக் கதை வசனம் எழுது பவரும், 1000 முறைகளுக்கு மேல் நாடகங்களை இந்தியா முழுவதும் மேடையேற்றியவருமான, பாம்பே சாணக்யா இந்த நாடகத்தைப் பற்றிச் சொல்லும்போது,

*"இந்த நாடகத்தைப் படித்தவுடன் எனக்கு ஏன் இப்படி எழுத வரவில்லை என்ற ஏக்கம்தான் வந்தது. தனிமை அவ்வளவு தத்ரூபமாக யதார்த்தமாக உள்ளது. இதை எழுதிய ஆனந்த் அவர்களுக்கும், மேடை யேற்றவிருக்கும் தீபா ராமானுஜம் அவர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகள்"*

**தீபா ராமானுஜம்**

## பரதத்தில் பாரதி

மகாகவி சுப்ரமணிய பாரதியை அறியாத தமிழன்பர்கள் எவருமிலர். எளிமையான சொல்லழகும் ஆழமான பொருளழகும் கூடிய பாரதியின் பாடல்கள் பலவற்றை இசைக் கலைஞர்கள் இசையமைத்துப் பாடியும், நாட்டியக் கலைஞர்கள் நடன வடிவம் அமைத்து ஆடியும் வருகின்றனர். பொதுவாக நடன நிகழ்ச்சிகளில் பாரதியின் பாடல்களுக்கான நடனங்கள் ஒன்றிரண்டு இடம்பெறும். ஆனால் ஒரு முழு நீள நடன நிகழ்ச்சி அனைத்துமே பாரதியின் பாடல்கள் கொண்டு அமைந்தால்...



அத்தகைய சாதனையை சமீபத்தில் நிகழ்த்தியவர் 'லாஸ்யா' (Lasya) நடன நிறுவனத்தின் இயக்குநர் திருமதி வித்யா சுப்ரமணியன் அவர்கள். 'லாஸ்யா'வில் நடனம் பயிலும் மாணவியர் பலருடனும் இணைந்து வித்யா வழங்கிய 'பரதத்தில் பாரதி' எனும் அருமையான நடன நிகழ்ச்சி மார்ச் 29ம் நாள் மாலை, San Jose நகரிலுள்ள 'Mexican Heritage Theater' இல் நடைபெற்றது.

'ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்' என்று விநாயகர், பராசக்தி, முருகன், கலைமகள், கண்ணபிரான், ஆகிய கடவுளரைத் தொழும் பக்திப் பாடல் திருமதி. ஆஷா ரமேஷின் இனிய குரலில் ஒலிக்க, இளம் நடன மாணவியர் கச்சிதமாக ஆட, நிகழ்ச்சி ஆரம்பத்திலிருந்தே நன்றாகக் களை கட்டியது. தெய்வபக்தி, தேசபக்தி, காதல், இயற்கைத் துதி, கண்ணன் பாடல்கள், சமுதாய உணர்வுப் பாடல்கள், என்று பாரதியின் பல்வேறு கண்ணோட்டங்களையும் வெளிப்படுத்தும் வகையில் பாடல்களைத் தேர்ந்தெடுத்தது பாராட்டுக்குரியது.

பாரதியாகத் தோன்றிய செல்வி கவிதா ராதாகிருஷ்ணனுக்கு நல்ல வேஷப் பொருத்தம். 'பளீ' ரென்ற வெண்மை கொண்ட மடிப்புக் கலையாத வேட்டியும், கம்பீரமான மீசையும் கொண்ட பாரதியாக அவரது தோற்றம் மனதைக் கவர்ந்தது. ஒப்பனைக் கலைஞர்களுக்கு ஒரு 'சபாஷ்'! 'என்று தணியும் இந்த சுதந்திரத்தாகம்' என்று தவிக்கும்போதும், 'சுட்டும் விழிச் சுடர்தான்' என்று காதலியை வர்ணிக்கும்போதும், 'நல்லதோர் வீணை செய்தே' என்று மறுகும்போதும், பாரதி அடைந்திருக்கக் கூடிய உணர்ச்சிகளை கவிதாவின் முகபாவங்கள் தெளிவாக வெளிக்கொணர்ந்தன.



கண்ணனைப் பிரிந்து தனிமையில் வாடும் தலைவியின் தவிப்பைக் 'கண்ணன் மனநிலையைக் கண்டு வரவேணுமடி' என பாரதியார் கவிதையில் வெளிப்படுத்தினார். அத்தலைவியின் தவிப்பு, கோபம், தாபம், விரகம் ஆகிய அனைத்து உணர்ச்சிகளையும் தமது ஆடலில் வெளிப்படுத்தி விட்டார் திருமதி. வித்யா. கவியின் ஒவ்வொரு சொல்லுக்குள்ளும் புதைந்திருக்கும் உணர்ச்சி களைத் தமது முக பாவத்திலும், ஆடல் அசைவுகளிலும் முழுமையாக வித்யா வெளிக் கொணர்ந்த விதம், அவர் ஒரு தேர்ந்த நடனக் கலைஞர் மட்டுமல்லாமல், பாரதியின் கவிதைகளில் மயங்கிய உண்மையான ரசிகையும் ஆவார் என்பதைக் காட்டியது.

பாரத மாதாவின் திருப்பள்ளி எழுச்சியின் போது, கதிரவன் உதயத்தைக் காட்டும் வகையில் அமைந்த மேடையலங்காரம் சிறப்பு! 'பாரத தேசமென்று' எனும் தேசபக்திப் பாடலுக்கும், 'தீராத விளையாட்டுப் பிள்ளை' எனும் கண்ணன் பாடலுக்கும் இளமங்கையர் ஆடிய நடனங்கள் பாராட்டும் வகையில் அமைந்தன. பாரதியின் தேசபக்திக் கவிதைகளும், கண்ணன் பாடல்களும், இசை நாட்டியக் கலைஞர்கள் மத்தியில் பிரபலமானவை. ஆனால் அவ்வளவாக பிரபலமடையாத, இயற்கையைப் போற்றும் கவிதைவரிகளைத் தேர்ந்தெடுத்து இசைவடிவம், நடனவடிவம் கொடுத்ததற்காக திருமதி ஆஷாவிற்கும், திருமதி. வித்யாவிற்கும் சிறப்புப் பாராட்டுகள். நெஞ்சையள்ளும் மந்தமாரும் தினப்புகழும் 'காற்று' பாடலுக்கு 'பாகஸ்ரீ' ராகத்திலும், திக்கெட்டும் சிதறிவிழும் 'மழை'யைப் போற்றும் பாடலுக்கு 'அமிர்தவர்ஷினி' ராகத்திலும் திருமதி ஆஷா இசையமைத்திருந்தது மிகப் பொருத்தம். அவரது இனிய பாடல்களுக்கும், திரு. நாராயனின் எடுப்பான மிருதங்க வாசிப்பிற்கும் பொருந்தும் வகையில், வெண்ணிற ஆடைகள் பறக்க இளமங்கையர் நடனமாடியது, 'இவர்கள் காற்றில் மிதந்தும், மழையில் நனைந்தும் உலா வரும் தேவதைகளோ!' என்று வியக்க வைத்தது. ஒப்பனைக் கலைஞர்களுக்கு மீண்டும் பாராட்டுகள்! திருமதி. சாந்தி நாராயணனின் வயலின் இசை,திரு. ராஜா சிவமணியின் வீணை, திரு. பிரசாத் ராயஸம் அவர்களின்keyboard ஆகியவை, தேனோடு கலந்த தெள்ளமுதமாக இசைக்கு மெருகேற்றின.

கவிதைகளை ரசிக்கும் தமிழன்பர்களுக்கும், நடன ரசிகர்களுக்கும், பாரதி பக்தர்களுக்கும் இந்நிகழ்ச்சி, செவிக்கினிய அமுதாகவும், கண்களைக் கவரும் விருந்தாகவும் அமைந்தது என்பதில் சந்தேகமில்லை!

**அருணா**

## நியூஜெர்சியில் - 2003 தமிழர் திருவிழா - விழா அழைப்பு

எம் அன்பிற்கு உரியவர்களே!

வணக்கம். அமெரிக்க வாழ் தமிழர்களே! ஆண்டுதோறும் எங்கள் உழைப்பு வெற்றியுடன் அமைய பெறும் ஆதரவு அளித்த உங்களுக்கு எங்கள் வணக்கம். 1988 தொடர்ந்து 2002 வரையும் உடனிருந்த உறவே, 2003றை நியூஜெர்சியில் உடனிருந்து வெற்றியாக்க வருவீர் எம் அழைப்பு ஏற்று! "இளையோர் போற்றுவோம்! இனம் காப்போம்" என்ற எண்ணம் சூழ்ந்த கருத்தோடு "தமிழ் அமெரிக்க மண்ணிலும் தழைத்து ஓங்கி வளர, நிலையோடு நின்று வாழ" அமைக்கப்பட்ட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவையின் 16ஆவது ஆண்டுவிழா! தமிழ் அறிஞர்